**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

Deposition of Witness for : PW-3 Date : 07.11.2024
Case No. : **O.S.118/2020** Nationality : Indian
Name : கௌசல்யா Religion :
Father's/Husband's Name : ரஞ்சித்குமார் Age : 27
Village :
Taluk :

<u>வா.சா.3</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இவ்வழக்கின் பொது அதிகார முகவர் சாந்தியின் மருமகள் என்றால் சரிதான். எனது சொந்த ஊர் எது என்றால் சிதம்பரம் ஆகும். எனக்கு திருமணம் ஆகி எத்தனை வருடம் ஆகிறது என்றால் 4 வருடம் ஆகிறது. எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள வெங்கட்ராம பத்தர், குப்புசாமி பத்தர், காசியம்மாள், ரெங்கநாத பத்தர், சரஸ்வதியம்மாள் ஆகியோரை எனக்கு தெரியுமா என்றால் ரெங்கநாத பத்தர் மற்றும் சரோஜா ஆகியோரை எனக்கு தெரியும் மற்றவர்களை தெரியாது. சரோஜா எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது அம்மாவின் பாட்டி ஆவார். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள நான்கெல்லை யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் எனக்கே தெரியும். பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் சரோஜா பெயரில் உள்ளது. நான் பட்டாவை பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

2. தாவா சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. தற்போது தாவா சொத்தின் அளவு தெரியுமா என்றால் ஒரு சொத்து 15 ஏர்ஸ் ஆகும். மற்றொரு சொத்து 12

செண்ட் ஆகும். யார் சொல்லி தாவா சொத்தின் அளவை தெரிந்து கொண்டேன் என்றால் எனது மாமியார் சாந்தி சொல்லி தெரிந்து கொண்டேன். தாவா சொத்து யாருக்கு சொந்தமானது என்ற விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் சரோஜா அந்த சொத்தில் வாழ்ந்து வருவதால் எனக்கு தெரியும். தாவா சொத்து சரோஜாவிற்கு எவ்வாறு கிடைத்தது என்று தெரியுமா என்றால் அவருக்கு ரெங்கநாத பத்தரின் வாரிசு என்ற முறையில் கிடைத்தது. ரெங்கநாத பத்தருக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் வெங்கட்ராம பத்தரின் வாரிசு முறையில் கிடைத்தது. தாவா சொத்து யாரால் எப்போது விலைக்கு வாங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்ன அளவுள்ள சொத்து வாங்கப்பட்டது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான்.

3. கோமதியை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து மற்றும் அதனுடன் இணைந்த சொத்து சரஸ்வதியம்மாளுக்கு சொந்தமாக இருந்தது என்றால் எனக்கு தெரியாது. சரஸ்வதியம்மாளின் பேத்தி கோமதியம்மாளுக்கு தாவா சொத்தில் சரிபாதி உரிமையுள்ளது என்றால் சரியல்ல. மீதமுள்ள பாதி சொத்தில்தான் ரெங்கநாதனுடன் சேர்ந்த 7 நபர்களுக்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. ரெங்கநாதனுக்கு எத்தனை பேர் வாரிசு என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. காசியம்மாளின் வாரிசுதாரர்கள் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் சொன்னவாறு தாவா சொத்து சரோஜாவிற்கு மட்டும் சொந்தமானதல்ல என்றாலும் கோமதியம்மாளுக்கு சொந்தமானது போக பாக்கியுள்ள பாதி சொத்தில் காசியம்மாளுக்கு சொந்தமானதாக இருந்து அவரது வாரிசுதாரர்களான 7 நபர்களுக்கு சொந்தமாக இருந்து அதில் 5 வாரிசுதாரர்கள் அவர்களுக்குரிய பங்கினை கோமதியம்மாளின் மகனுக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றாலும் சரியல்ல. ரெங்கநாதனுக்கு சொந்தமான ஒரு பாக சொத்தினை அவர் இறந்த பிறகு அவரது வாரிசுதாரர்களான சரோஜா மற்றும் அவரது 3

மகள்களுக்கு சொந்தமானதாக இருந்தது என்றாலும் அதனை மறைத்து முழு சொத்திற்கும் பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கிற்கு அனுசரணையாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களை எனது மாமியார் சொல்லி கொடுத்து சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து மற்றும் மற்ற விவரங்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.